சுருக்கம்

தென்னை விவசாயிகள் நலவாரியம் - திரு ராஜ்குமார் மன்றாடியார் தலைவராக நியமனம் செய்யப்பட்டது – தலைவர் பதவியில் பணிபுரிந்த 244 நாட்களுக்கு மதிப்பூதியம் தொகை ரூ.1,20,806/- நிர்ணயம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (தோக2) துறை

அரசாணை (நிலை) எண்.33 நாள் 23.02.2012

திருவள்ளுவர் ஆண்டு 2043, மாசி 11

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.243, வருவாய் [நிலச்சீர்த்திருத்தம் 1(2) துறை] நாள் 24.7.2009.
2. அரசாணை (நிலை) எண்.197, வேளாண்மை (எ.வி) துறை, நாள் 11.9.2010.

மேலும் படிக்கப்பட்டது:-

3. ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கடித நாள் தெவிநவா/24204/2010, நாள் 29.12.2010.
4. ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கடித எண். தெவிநவா/24204/2010, நாள் 21.6.2011.

------

ஆணை:-

பார்வை 2-ல் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரியத்திற்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர் உட்பட 17 அரசு சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. தென்னை விவசாயிகள் நலவாரியத்தின் உறுப்பினர்களுக்கு போக்குவரத்து செலவு, பயணப்படி மற்றும் தகுதியுள்ள இதரப்படிகள் வழங்கும் பொருட்டு முதல்நிலைக் குழுவாக கருதப்படும் என்றும், மேற்கூறிய அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. பார்வை 3-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள், அரசாணை (நிலை) எண்.243, வருவாய்த் [நிலச்சீர்த்திருத்தம் 1(2) துறை] நாள் 24.7.2009-ன் படி தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியத்தலைவர் அவர்களுக்கு மதிப்பூதியம் மாதம் ரூ.15,000/-என நிர்ணயித்து அரசு ஆணையிட்டுள்ளது என்றும், இதன் அடிப்படையில் முதல்நிலை குழுவாக கருதப்படும் தென்னை விவசாயிகள் நலவாரியத்தலைவர் அவர்களுக்கும் மாதம் ரூ.15,000/-மதிப்பூதியம் நிர்ணயம் செய்யுமாறு கோரியிருந்தார்.

/த.பி.பா/

3. பார்வை 4-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்கள், திரு ராஜ்குமார் மன்றாடியார் அவர்கள் தலைவர், தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரியம் பதவியை குடும்ப சூழ்நிலை காரணமாக 13.05.2011 அன்று ராஜினமா செய்துள்ளார் என்றும், அவர் தலைவராகப் பதவியேற்ற காலத்தில் இரண்டு வாரிய உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் வட்ட அளவிலான விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம் ஆகியவற்றில் பங்கேற்றுக் கொண்டு அறிவுரை வழங்கியுள்ளார் என்றும், மேலும் தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரிய உறுப்பினராக சேரும் படிவம் மற்றும் பாஸ்புத்தகம் முதலியன உருவாக்க தக்க நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அவர் தென்னை செய்திமடல் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரவும், தென்னை விவசாயிகளின் பரிந்துரைகளை புத்தக வடிவில் வெளியிட்டு அரசுக்கு வழங்கவும், இளநீரை பாக்கெட்டுகளில் அடைத்து காதிகிராம மையங்களில் விற்பனை செய்யவும் வழிவகை செய்துள்ளார் எனவும் தெரிவித்து, அவர் 11.09.2010 முதல் 12.05.2011 வரை பணிபுரிந்த 244 நாட்களுக்கும் மதிப்பூதியம் ரூ.1,20,806/-ஆக கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து, அதனை வழங்க அரசாணை வழங்குமாறு கோரியிருந்தார்:-

| மாதம் | நாட்கள் | வழங்கப்பட வேண்டிய தொகை (ரூ.) |
|---|---|---|
| செப்டம்பர் 2010 | 20 நாட்கள் (11.09.2010 முதல் 30.09.2010) | 10000 |
| அக்டோபர் 2010 | 31 நாட்கள் | 15000 |
| நவம்பர் 2010 | 30 நாட்கள் | 15000 |
| டிசம்பர் 2010 | 31 நாட்கள் | 15000 |
| ஜனவரி 2011 | 31 நாட்கள் | 15000 |
| பிப்ரவரி 2011 | 28 நாட்கள் | 15000 |
| மார்ச் 2011 | 31 நாட்கள் | 15000 |
| ஏப்ரல் 2011 | 30 நாட்கள் | 15000 |
| மே 2011 | 12 நாட்கள் (01.05.2011 முதல் 12.05.2011) | 5806 |
| | மொத்தம் | 1,20,806 |

4. ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களின் கருத்துருவை அரசு பரிசீலித்தது. அவ்வாறே ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அவர்களின் கருத்துருவினை ஏற்று தென்னை விவசாயிகள் நல வாரியத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்ட திரு ராஜ்குமார் மன்றாடியாருக்கு மாதம் ரூ.15,000/-என மதிப்பூதியம் நிர்ணயித்து அவர் அப்பதவியில் பணிபுரிந்த 244 நாட்களுக்கு ரூ.1,20,806/-ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரத்து எண்ணூற்று ஆறு மட்டும்) மதிப்பூதியத் தொகையாக தென்னை விவசாயிகள் நலவாரிய நிதியிலிருந்து வழங்க ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/த.பி.பா/

5. இவ்வரசாணை நிதித்துறை, அ.சா.எண்.9040/வேளாண்மை/2012, நாள் 21.02.2012-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை – 5.
திரு. ராஜ்குமார் மன்றாடியார்,
அனூர், பழைய எண்.5, புதிய எண்.11,
ஏ.பி.எம். அவின்யூ, சென்னை – 600 028.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9.

<u>நகல்:</u>
நிதித் (வேளாண்மை) துறை,
சென்னை – 600 009.
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு அமைச்சர் (வேளாண்மை) அலுவலகம், சென்னை – 9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

23/2/12
பிரிவு அலுவலர்